சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா. | 7 | நாள் | : 25.04.2025 |
| அசல் வழக்கு எண். | 8/2024 | | |
| பெயர் | முத்துசாமி | த/பெ | தங்கசாமி |
| வயது | | தொழில் | முதுநிலை வருவாய் ஆய்வாளர் (Senior Revenue Inspector) |
| கிராமம் | | தாலூக்கா | மயிலாடுதுறை |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழிசெய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணையின் தொடர்ச்சி :**

இந்த வழக்கில் வருவாய் கோட்டாட்சியர் மயிலாடுதுறை அவர்கள் என்னை சாட்சியமளிக்க பணித்துள்ளார். அதற்கான **அதிகார கடிதம் Ex.X.5** ஆகும். MC. No. 45/2022/ஆ1 அசல் கோப்புகளை எடுத்து வந்துள்ளேனா என்றால் இல்லை. கம்ப்யூட்டரில் இருந்து நகல் எடுத்து வந்துள்ளேன். அந்த நகலில் வருவாய் கோட்டாட்சியர் கையெழுத்தோ தரப்பினர்களின் கையெழுத்தோ இல்லை என்றால் சரி. தரப்பினர்கள் கொடுத்ததாக சொல்லும் வாக்குமூலத்திலும் தரப்பினர்களின் கையெழுத்து இல்லை என்றால் சரி. 107 Cr.PC Proceedings சம்பந்தமான அசல் கோப்புகளை எடுத்து வந்தால் தான் தரப்பினர்களின் வாக்குமூலங்கள் மற்றும் அந்த 107 Cr.PC Proceedings ல் ஏற்பட்ட முடிவுகளை பற்றி சரியாக சொல்லமுடியும் என்றால் சரி. நான் எடுத்து வந்துள்ள computerised நகல் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. அசல் ஆவணங்களை எடுத்து வந்து நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க கடமைபட்டுள்ளேன் என்றால் சரி எடுத்து வருகிறேன். நான் எடுத்து வந்துள்ள computerised நகலில் யாருடைய கையெழுத்தும் இல்லை என்றால் சரி. எல்லோரும் கலக்டர் மீட்டிங் போயிருக்கிறார்கள். அதனால் வாங்க முடியவில்லை. மதியம் வாங்கி எடுத்து வருகிறேன். சாட்சி மேற்படி computerised ஆவண நகலில் கையொப்பம் பெற்று வந்து தாக்கல் செய்கிறார்.

அந்த computerised ஆவண நகல் **Ex.X6** ஆகும். நான் தாக்கல் செய்துள்ள ஆவண நகலின் பக்கம் 2 விசாரணை ஆஜராக கொடுத்த அறிவிப்பு என்றால் சரி. ஆவண நகலின் பக்கம் 4 ராஜராஜேஸ்வரி மேற்படி விசாரணையின்போது கொடுத்த வாக்குமூலம் என்றால் சரி. ஆவண நகலின் பக்கம் 5 – 6 அந்த நடவடிக்கை வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டதற்கான பதிவு என்றால் சரி. ஆவண நகலின் பக்கம் 7 12.09.2022 தேதியில் ராஜராஜேஸ்வரியும் வெங்கட் என்ற வெங்கட்ராஜலுவும் மேற்படி நடவடிக்கைக்கு ஆஜரான பதிவு என்றால் சரி. அந்த கோப்பில் இதை தவிர வேறு எதுவும் இல்லை என்றால் சரி. நான் தாக்கல் செய்துள்ள Ex.X6 ஆவணத்தில் அந்த நடவடிக்கை முடிவு பெற்றதற்கான எந்த விவரமும் இல்லை என்றால் சரி. அசல் கோப்பை தேடி எடுக்க 10 நாட்கள் கால அவகாசம் தேவைப்படுகிறது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் அக்டோபர் 01, 2024ல் மயிலாடுதுறை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் பணியில் சேர்ந்தேன். மேற்படி 107 குவிமுச நடவடிக்கையின்போது நான் அந்த அலுவலகத்தில் பணியில் இல்லை என்றால் சரி. நான் அந்த காலகட்டத்தில் வருவாய் கோட்டாட்சியர்அலுவலகத்தில் பணியில் இல்லாததால் அந்த நடவடிக்கை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி. 107 குவிமுச நடவடிக்கை இரு தரப்பினர்களிடையே பேச்சு வார்த்தை நடத்தி அமைதி ஏற்படுத்துவது தான் என்றால் சரி. அசல் கோப்புகளை எடுத்து பார்த்தால் தான் எந்த தரப்பினர் ஆஜரானார்கள் விளக்கம் கொடுத்தார்கள் என்ற விவரமும் இறுதி உத்தரவு என்ன பிறப்பிக்கப்பட்டது என்ற விவரமும் தெரியவரும் என்றால் சரி.

**2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் வாதி தரப்பு குறுக்கு விசாரணை Adopt செய்து கொள்ளப்படுகிறது.

25/4/2025

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

25/4/25
மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

25/4/25